1975 மார்ச் 24]

அறிந்த பிறகு, ஏல ஒப்பந்தங்கள், அறிவிப்புகள் ஆகியவைகளுக்கான வற்றை தமிழரசு பத்திரிகையில் மட்டும் வெளியிடுவது என்று முடிவு செய்யப்பட்டு, அவைகள் அந்தப் பத்திரிகையில் விளம்பரம் செய்யப் பட்டுள்ளன. மாநில அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விளம் பரங்கள் மற்ற செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி மேல் சபையில் முன்பு கேட்கப்பட்டிருக்கிறது. 1967–68ல் ரூ. 4·67 லட்சம், 1968–69ல் ரூ. 7·38 லட்சம் என்ற அளவிலே விளம்பரம் கொடுக்கப் பட்டது என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அமைச்சர் அவர்கள் சொல்கின்ற பதிலிலிருந்து 1970–71ல் ரூ. 30 லட்சம் கொடுக்கப்பட்டது என்று தெரிகிறது. கிட்டத்தட்ட 7 அல்லது 8 மடங்குக்கு மேலாக இந்த விளம்பரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏன் இந்த விளம்பரங்கள் கூடுதலாக அரசாங்கத்திலே செய்யப்படுகின்றன? என்ன காரியங்களுக் காகச் செய்யப்படுகின்றன? அதனாலே விளைகிற பலன் என்ன என்பதை அமைச்சர் கூறவேண்டும். அத்துடன் 1972–73, 1973–74, 1974–75லே செய்யப்பட்ட செலவுகளை அமைச்சர் அவர்கள் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, 1969–70, அதற்கும் முன்பான ஆண்டுகளில் செலவிட்ட தொகையைவிட இப்போது கூடுதலாக என் ஆகியது என்பதற்குக் காரணம் செய்தித்தாள்களில் அதிகமான விளம்பரக் கட்டணங்கள் தான். அதற்குப் பிறகு 1973–74 ஆம் ஆண்டுக்கான புள்ளிவிவரங்கள் என்னிடத்திலே கிடையாது. 2 ஆண்டுகளுக்கு மட்டுமே கேட்டார்கள். அந்த 2 ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்களை மட்டும் நான் சொல்லியிருக்கின்றேன்.

அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்ற பல்வேறு திட்டங்கள், பல்வேறு சாதனைகள், பல்வேறு வாரியங்களின் வளர்ச்சிப் பணிகள் இத்தனை யையும் மக்களுக்கு அறிவிக்கின்ற வகையில் இத்தகைய காரியங்கள் செய்யப்பட்டுள்ளன.

Total Annual Income of the Temple at 'ANBIL' Village

* 181 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the total annual income of the temple at 'ANBIL' Village in Tiruchirappalli district which comes under 'Arulmigu Aranganathaswami Devasthanam, Srirangam; and

(*b*) whether any guest house facilities are made available there to the pilgrims?

'அன்பில்' கிராமத்திலிருக்கும் கோயிலின் மொத்த ஆண்டு வருமானம்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி தேவஸ்தானத்தின் கீழ்வரும் 'அன்பில்' கிராமத்திலிருக்கும் கோயிலின் மொத்த ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(இ) யாத்ரீகர்களுக்கு தங்கும் விடுதி வசதி ஏதேனும் அங்கு செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கீழன்பில் கிராமத்திலுள்ள அருள்மிகு பிரம்மபுரீஸ்வரர் மற்றும் மாரியம்மன் கோயில்களும் மேலன்பில் கிராமத்திலுள்ள அருள்மிகு சௌந்தரராசப்பெருமாள் கோயிலும் திருவரங்கம் அருள்மிகு அரங்க நாதர் திருக்கோயிலின் பராமரிப்பில் உள்ளவையாகும். இவற்றின் மொத்த ஆண்டு வருமானம் சுமார் ரூ. 15,000.

(இ) யாத்ரீகர்கள் தங்கும் விடுதி என்ற பெயரில் தனிப்பட்ட விடுதி எதுவும் அங்கே கிடையாது. ஆனல் கீழன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அலுவலகத்தில் ஓய்வு எடுப்பதற்கு ஏற்றாற்போல் ஓய்வு அறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதில் யாத்ரீகர்கள் இலவசமாகத் தங்கி ஓய்வு எடுத்துச் செல்கிருர்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்த இரண்டு கோயில் களுக்குமாகச் சேர்த்து ஆண்டு வருமானம் ரூ. 15 ஆயிரம் என்று இருக்கும்போது, இந்தக் கோயிலிலே ஒருவர் தங்கி ஓய்வு எடுப்பதற காக ரூ. 2 ஆயிரம் செலவிலே இந்த ரெஸ்ட் அவுஸ் கட்டப்பட்டு அங்கே 'போம்' பெட்கள்கூட பயன்படுத்தப்படுகின்றனவா ? அங்கு யாத் ரீகர்கள் வந்து தங்குகிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, ஒருவர் வந்து தங்குகிருரா இல்லையா என்று தெரியவில்லை. அலுவலகத்தை ஒட்டி ஒரு ஓய்வு அறை இருக்கிறது. அந்த ஓய்வு அறையில் பிரயாணிகள் இலவசமாகத் தங்கிக்கொண்டிருக்கின்ருர்கள் என்ற குறைபாட்டைச் சொல்கிருர்கள். அதற்காக ரூ. 2 ஆயிரம் செலவழிக்கப்பட்டதா என் பதற்கு குறிப்பு என்னிடத்தில் இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ரூ. 700 செலவிட்டு 'போம்' பெட்டுகள், தலையணைகள் அங்கே போடப்பட்டிருக்கின்றன. யாத்ரீகர் களுக்கு வேறு கோயில்களில் இந்த மாதிரியான வசதிகள் செய்து தரப்படுகின்றனவா என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

1975 மார்ச் 24]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, எங்கெங்கு ஓய்வு எடுக்கின்ற அறைகள் கொடுக்கின்ற வசதியுள்ள கோயில்கள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் இப்படிப்பட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அதைத்தான் நான் குறிப்பிட்டேன். இந்தக் கோயிலிலே வருமானம் ஆண்டுக்கு ரூ. 15 ஆயிரம். இதிலே ரூ. 2 ஆயிரம் ஓய்வு எடுக்க செலவு செய்யப்பட்டால், அந்தக் கோயிலுக்கு என்று என்ன செலவு நடக்கும்? அர்ச்சனை போன்ற செலவுகூட இல்லை. அப்படி இருக்கும்போது இப்படிச் செலவு செய்வது சரியானதா என்று அமைச்சர் அவர்கள் கூற வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்தக் கோயிலினுடைய வருமானம்தான் 15 ஆயிரம் ரூபாயே தவிர, இது ஒரு கூட்டுக்கோயில். ஸ்ரீரங்கம், சமயபுரம் கோயில், மற்ற கோயில்களோடு இணைக்கப்பட்டிருக்கின்ற ஒரு கோயில் ஆகும். இந்தக் கோயிலுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் வருமானம் 15 ஆயிரம் ரூபாய். எல்லாக் கோயில்களின் வருமானத்தையும் சேர்த்துத்தான் நாம் பராமரிக்கின்றோம். ஓரிடத்திலே உறுப்பினர்களே ஓய்வு அறை இருக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்கள். அப்படி ஓய்வு அறை வடுதிகள் கட்டும்போது, தேவையான வசதிகள் இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அங்கே போனால்கூட வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். அந்த வகையிலே இப்படியெல்லாம் வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, யாத்ரீகர்களே, வராத இடத்தில் இப்படிப்பட்ட கெஸ்ட் அவுஸ் கட்டவேண்டிய அவசியமில்லை என்பதைத் தான்நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அந்த போம் பெட்டில் போய் படுத்தாரா? படுப்பதற்குச் சங்கடமாக இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–20)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, இந்த தேவஸ்தானங்களிலே எந்தக் கோவிலிலே இருந்து அதிகமான வருமானம் வருகிறது? அதை எந்தக் கோவிலுக்கு அதிகமாகச் செலவழிக்கிறார்கள் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையின்படி மாரியம்மன் திருக்கோவிலிலிருந்துதான் அதிகமான வருமானம் வருகிறது. எல்லாக் கோவில்களுக்கும் சேர்த்து வருகின்ற வருமானத்தை ஒருமுகப்படுத்தி கூட்டாகச் செலவு செய்கிறார்கள். தனித்தனியாகச் செலவு விவரம் வேண்டுமானால், தனிக் கேள்வி கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1975 மார்ச் 24

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, ஏராளமாக மாரியம்மன் கோவிலிலிருந்து வருமானம் வந்துகொண்டிருக்கிறது. அன்பில் மாரியம்மன் கோவில் இல்லை, சமயபுரம் மாரியம்மன் கோவிலிலிருந்து ஏராளமான பணம் வந்துகொண்டிருக்கிறது. அந்த வருமானத்தை ஸ்ரீரங்கம் கோவிலோடு இணைத்துச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஸ்ரீரங்கம் கோவிலுக்கு யாத்திரீகர்கள் கிட்டத்தட்ட காஷ்மீரிலிருந்தும், நேபாளத்திலிருந்தும், எல்லா மாநிலங்களிலிருந்தும் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தனித் தனியாகத் தங்குவதற்கு இதுவரை எந்தவிதமான ஏற்பாடுகளாவது சர்க்கார் செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த ரங்கநாதரே ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பதால், வருகிறவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளத் தேவையில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு ஒரு விளக்கம் சொல்லுகிறேன். ரங்கநாதர் எப்பொழுதும் ஓய்வு எடுத்தது இல்லை. சயனத்திலிருந்து மக்களுடைய நல்வாழ்விற்காக அனுகிரகித்துக்கொண்டிருக்கிறார் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பாட்டிலே 'பள்ளி கொள்ளும்' என்று தான் இருக்கிறது. 'திருவரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் மாலோனைக் கண்டு இன்பக் கல்வியெய்தி வல்வினையேன் என்று கொலோ வாழும் நாளே' என்று இருக்கிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

நியாய விலையில் அரிசி கிடைக்காமையால் மதிய உணவு மையங்களை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருப்பது குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருளைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:—

"தமிழ்நாட்டில் உள்ள மதிய உணவு மையங்களுக்கு நியாய விலையில் அரிசி கிடைக்காமையால் மதிய உணவு மையங்கள் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டு அங்குள்ள குழந்தைகள் பாதிக்கப்படுவதைக் குறித்து."